**7th TEST**

Marks : 300

Time : 3 Hrs

## TARGETING

# TNPSC

## GROUP-II

## 2023

QUESTION
WITH SIMPLIFIED
ANSWER

## MAINS WRITTEN EXAM

### மாநில அரசாங்கத்தின் அமைப்பு

- அமைப்பு
- பணிகள்
- கட்டுப்பாட்டு முறைகள்




SURESH' IAS ACADEMY

ARISE AWAKE ACHIEVE


தமிழ் வழி


| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
|---|---|---|---|---|
| 0461 - 4000970<br>99445 11344 | 0462 - 2560123<br>98942 41422 | 75503 52916<br>75503 52917 | 0452 - 2383777<br>98431 10566 | 97555 52003<br>97555 52009 |

TEST 7 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு - 1

**1) நிதி ஆயோக்கின் சீரியமிக்க நிர்வாகத்திற்கான ஆறு தூண்களை பட்டியலிடுக** 1

- இந்திய அரசால் நிதி ஆயோக்கானது செயல்முறை தீர்வுகளுக்காக உருவாக்கப்பட்டது.
- இது அரசியலமைப்பு சார்ந்தது அல்ல, சுயரீதியான அமைப்பும் அல்ல.
- நிதி ஆயோக் இந்திய அரசின் சிந்தனைத் தொட்டி என்று அழைக்கப்படுகிறது.
- கூட்டாட்சியின் நம்பகத் தன்மையை வெளிப்படுத்தும் விதத்தில் கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் கடைநிலை கருத்துக்களையும் கொண்டு தேசிய கொள்கைகளை வகுக்கும் முறையாகும்.

**நிதி ஆயோக்கின் நிர்வாகத் தூண்கள்** 5

**1. மக்கள் சார்பு**
- தனிமனித மற்றும் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்தல்

**2. சார்பு செயல்பாடு**
- குடிமக்களின் எதிர்பார்ப்பையும் அவை நிறைவேற்றப்பட்டதற்கான பதிவையும் கருத்தில் கொள்ளுதல்

**3. பங்கேற்பு**
- குடிமக்களின் ஈடுபாடு

**4. அதிகாரமளித்தல்**
- எல்லாத் தளங்களிலும் பெண்களுக்கு அதிகாரமளித்தல்

**5. உள்ளடக்கம்**
- எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி, சிறுபான்மையினர், விவசாயிகள், காவ்காரீஹ் ஆகியோரை உள்ளடக்கியது.

**6. சமத்துவம்**
- இளையோருக்கான சமமான வாய்ப்பு

**7. வெளிப்படைத்தன்மை**
- அரசு உடனடியாக இனங்கண்டு பதிலளிக்கக்கூடிய, கட்டமைப்பு பெற்றுள்ளது.
- நிதி ஆயோக் நிலையான மேம்பாடுகளுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்

**2) நிர்வாகச் சட்டத்திற்கும் அரசமைப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? மற்றும் இதனை தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.** 1

- அரசமைப்பு சட்டமும் மற்றும் நிர்வாகச் சட்டமும் அரசின் செயல்முறைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படுகிறது.
- இவ்விரண்டும் நவீன தேசிய அரசின் முக்கியக் கூறாக கருதப்படுகிறது.
- அரசமைப்பு சட்டத்தை ஒப்பிடுகையில் நடைமுறை காரணங்களுக்காக நிர்வாகச் சட்டமே மேலோங்கி நிற்கிறது.

| அம்சங்கள் | அரசியலமைப்பு சட்டம் | நிர்வாகச் சட்டம் 5 |
|---|---|---|
| வரையறை | சட்டரீதியாக நடைமுறைப்படுத்திய கொள்கைகளின் கீழ்வரும் அதிகாரம், உரிமை ஆகியவற்றை கையாள்கிறது. | நிர்வாக காரணங்களுக்காக அரசால் நடைமுறைபடுத்தப்பட்ட கொள்கைகளை கையாள்கிறது. |
| மூலம் | எழுதப்பட்ட அரசியலமைப்பு கொண்ட நாடுகளில் இருந்து அரசியலமைப்பு சட்டமானது எடுக்கப்பட்டது. | நிர்வாகச் சட்டங்களானது நிர்வாகச் சுழற்சி, செயல்படுத்தும் மட்டங்கள், சுற்றறிக்கைகள் அறிவுறுத்தும் கடிதங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்படுகிறது. |
| சட்ட அந்தஸ்து | ஒரு மாநிலத்தின் பிரதான சட்டமாக விளங்குகிறது. | இது பிரதானமாக நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு துணை செய்தது. |
| சட்டத்தின் தன்மை | மாநிலத்தின் உறுப்புகளையும் அதன் கட்டமைப்புகளையும் கையாள்கிறது. | நடைமுறைச் செயல்பாடுகளில் உள்ள சிக்கல்களைக் கையாள்கிறது. |
| நோக்கம் | குடிமக்களுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான உறவு, பொது நிர்வாகச் சட்டங்கள் மாநிலத்தின் அதிகாரத்தையும் கருத்தில் கொள்கிறது. | இது ஒரு குறுகிய நோக்கத்தை உடையது. மாநில அரசின் நிர்வாகத்திலும், நிர்வாக அமைப்புகளையும் கையாள்கிறது. |
| குறியீடு | எழுதப்பட்ட ஒரே மூலத்தை குறியீடாக கொண்டுள்ளது. | நூற்றுக்கும் அதிகமான நிர்வாகச் சட்டங்கள் அடிக்கடி மாற்றங்களை எதிர்கொள்வதால் ஒரே குறியீட்டை பெறுவதில்லை. |
| உதாரணம் | பேச்சு சுதந்திரம், தாமதமான செயல்முறை, நீதிமறுசீராய்வு சமமான பாதுகாப்பு முதலியன. | அரை நீதி அமைப்பு லோக்பால் & லோக் ஆயுக்தா சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் முதலியன. |

3) **நிர்வாக சட்டங்களில் – ஒப்படைப்பு அதிகாரம் என்றால் என்ன? அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.**

– நிர்வாகச் சட்டத்தில் தூதுக் குழுக்களின் மூலம் மூலச் சட்டத்தின் தன்மை மாறாமல் செயல்படுத்துவது ஆகும்.

– நிர்வாகச் சுமைகளை குறைப்பதற்கான ஒரு வழிமுறையாக கருதப்படுகிறது. 2

**வகைகள்** 1

– சட்டம் மற்றும் செயல்முறைகளும், ஆணைகள், செயல்முறை அறிவிக்கைகள் அனைத்தும் நிர்வாகச் செயல்பாடுகளின் ஒரு பகுதியாகும்.

**குழுக்களின் முக்கியத்துவம்** 3

– நிறுவனத்திற்கான முக்கியத்துவம் அறிது அதிக நேரம் செலவிடுதல்

– வழக்கமான பணி சுழற்சியை மாற்றியமைத்து ஒரு சுதந்திர தன்மையை தோற்றுவிக்கிறது.

– துணைநிலை ஊழியரின் பணிபற்றி ய புரிதலானது அவர் வளர்ச்சிக்கு உறுதுணை செய்கிறது.

– துணைநிலை ஊழியர்களுக்கான புதிய திறமைகளை வளர்த்தெடுப்பதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.

– நம்பகத்தன்மை வாய்ந்த ஊழியர்களுக்கு நிறுவனம் சார்பான பாராட்டுக்களும் பிரநிதித்துவ குழுக்களின் ஊக்கமும் தரப்படுகிறது.

– இந்தச் செயல்பாடுகள் ஊழியர்களுக்கு மன உறுதி அளித்து, உற்பத்தித் திறனை பெருக்க வழிசெய்கிறது.

4) **முதலமைச்சர் என்பவர் மாநிலத்தின் உண்மையான தலைவர் – விவரி**

**முதலமைச்சர் முதன்மை அமைச்சராக திகழ்வதற்கான காரணம்**

**ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையிலான உறவுகள்** 6

– நிர்வாகம் தொடர்பான மாற்றங்களையும் சட்ட அணுகுமுறைகளையும் ஆளுநருக்கு தெரிவித்து மாநில அரசாங்கத்தை வழிநடத்துகிறார்.

– ஆளுநருக்கு தேவையானபொழுது திட்டங்களுக்கான தரவுகளை சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளார்.

**மாநிலத்தின் முதன்மை அமைச்சர்**

– ஆளுநரின் முதன்மை பரிந்துரையாளராக விளங்குகிறார். பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவராக விளங்குகிறார்.

– அவருடைய கட்சியில் உச்சபட்ச அதிகாரம் பெற்றவராக விளங்குகிறார்.

**மாநிலத்தின் நிர்வாகப் பிரதிநிதி**

– முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரின் அந்தந்த துறைக்கான அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.

– ஒவ்வொரு அமைச்சர்களையும் வழிகாட்டுதல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார்.

– முதலமைச்சர் பதவியை இழக்கும்பொழுது அமைச்சர்களும் இழக்கின்றனர்.

**மாநில அரசின் கொள்கைகளின் முதன்மை வடிவமைப்பாளர்**

– முதலமைச்சர் அனைத்து சட்டங்களையும் திட்டங்களையும் பொதுமக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக தெரியப்படுத்துகிறார்.

– அரசு எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றி குறிப்பிட்ட இடைவெளியை ஊடகவியலாளர்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துகிறார்.

**துறைகள் ஒதுக்கீடு**

– ஒவ்வொரு அமைச்சருக்குமான துறை ஒதுக்கீடு மற்றும் மாறுதல்கள் உள்ளிட்ட முடிவுகளை மேற்கொள்கிறார்.

– முதலமைச்சர் உத்தரவிடும் பட்சத்தில் அமைச்சர் பதவி விலகியாக வேண்டும்.

**சட்டசபை கலைப்பு**

– சட்டசபையை கலைப்பதற்கான பரிந்துரையை ஆளுநரின் எந்த நேரத்திலும் சமர்ப்பிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

**மாநில அளவிலான சமூகச் செயல்பாடு**

– மாநில அரசின் சமூகச் செயல்பாட்டிற்கான வழிமுறைகள் மேற்கொள்கிறார்.

– மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே நல்லுறவை பேணுவதற்கு வழிவகை செய்கிறார்.

**மாநிலத்தின் உண்மையான நெருக்கடி மேலாளர்**

– பேரிடர்கள், இடையூறுகள் ஏற்படும் பொழுது அதை மேலாண்மை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறார்.

5) **அமைச்சரவைக் குழுவின் ஆலோசனைக் குழு உட்படாமல் குடியரசு தலைவர் தன்னிச்சையாக செயல்படுவதற்கான விதிவிலக்குள் யாவை?**

**குடியரசுத் தலைவர்:** 1

- இந்தியக் குடியரசுத் தலைவர் அமைச்சர்கள் குழுவின் ஆலோசனையைப் பின்பற்றக் கடமைப்பட்டவர்.

- குடியரசுத் தலைவர் ஒரு பெயரளவிலான அரச தலைவர், உண்மையான நிறைவேற்று அதிகாரங்கள் பிரதமரிடம் உள்ளன

- அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனைக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் கட்டுப்படாத போது விதி விலக்குகள் உள்ளன

- இது போன்ற சந்தர்ப்பங்களில், ஜனாதிபதி தனது சொந்த விருப்ப அதிகாரங்களைப் பயன்படுத்தி வேலை செய்யலாம்.

**அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனைக்கு இந்திய ஜனாதிபதி கட்டுப்படும் விதி விலக்குகள்** 5

**பிரதமர் நியமனத்தின்போது**

- லோக்சபா தேர்தலுக்குப் பிறகு எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில், ஜனாதிபதி தனது சொந்த விருப்பத்தின் பேரில் போட்டியாளர்களில் ஒருவரை நியமிக்கலாம்.

- உதாரணம்– 1984 இல், இந்திராகாந்தியின் படுகொலையைத் தொடர்ந்து ராஜீவ் காந்தியை பிரதமராக ஜனாதிபதி ஜைல்சிங் நியமித்தார்.

- 1989 இல், ஜனாதிபதி வெங்கட்ராமன் விபிசிங்கை பிரதமராக நியமித்தார்

**தகவல் கேட்பது**

- இந்திய அரசியலமைப்பின் 78 வதுபிரிவின் படி அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை பிரதமரிடம் ஜனாதிபதி கேட்கலாம்.

**பிரச்சினையை மறுபரிசீலனை செய்தல்**

- இந்திய அரசியலமைப்பின் 74 மற்றும் சட்டப்பிரிவு 111 படி, குடியரசுத் தலைவர் மந்திரி சபையிடமிருந்து பிரச்சினையை மறுபரிசீலனை செய்யலாம்
- மறுபரிசீலனை செய்த பிறகு திருத்தங்கள் செய்யப்பட்டால், குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கவேண்டும்.

**வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துதல்**

- ஜனாதிபதியால் மசோதா மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது
- உதாரணம்– ஜைல்சிங் 1986 இல் அஞ்சல் அலுவலக (திருத்தம்) மசோதாவிற்கு தனது எதிர்ப்பைக்காட்ட பாக்கெட் வீட்டோவைப்பயன்படுத்தினார். இந்த மசோதா பின்னர் 1990 இல் V.P.சிங் அரசாங்கத்தால் திரும்பப்பெறப்பட்டது

6) **மாநிலத்தின் முதலமைச்சர் அரசியலமைப்பின் படி எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?**

**முதல் அமைச்சர்:** 3

- மாநிலத்தின் உண்மையான தலைவர் முதல்வர். ஆளுநர் விரும்பும் வரை முதலமைச்சர் பதவிவகிப்பார்

**நியமனங்கள்:** 1

- அரசமைப்புச் சட்டம் 164 முதலமைச்சர் ஆளுநரால் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது
- சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை அடிமை வாக்குகளைப் பெற்ற கட்சியின் தலைவர்.
- மாநில சட்டமன்றத்தில் உறுப்பினராக இல்லாத ஒருவர் 6 மாதங்களுக்கு முதலமைச்சராக நியமிக்கப்படலாம்.

**முதல்வர் பதவிக்காலம்:** 2

- முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப் படவில்லை, ஆளுநர் விரும்பும் வரை அவர் பதவிவகிக்கிறார்
- அவர் மாநில சட்ட சபையில் பெரும்பான்மையை கொண்டிருக்கும்வரை, அவரை பதவிநீக்கம் செய்யமுடியாது

**ஆளுநர் சூழ்நிலை காரணமாக விருப்புரிமை அடிப்படையில் செயல்படலாம்**

- முதல்வர் 6 மாதங்களுக்குள் இரு அவைகளிலும் உறுப்பினராகவில்லை என்றால், அவர் முதல்வர் பதவியை இழக்கிறார்
- சபையில் பெரும்பான்மையைப் பெறும்கட்சி (அல்லது) கூட்டணி அதன் தலைவரைத் தேர்ந்தெடுத்து ஆளுநருக்கு அறிவிக்கிறது
- தனிப்பெரும்பான்மை இல்லாதபோது, தனிப்பெரும் கட்சியின் தலைவரை ஆட்சி அமைக்க ஆளுநர் அணுகுவார்.

7) **செயலகம் மற்றும் இயக்குநரகத்திற்கு இடையே உள்ள தொடர்பை மேம்படுத்துவதற்கு முதலாவது நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளை எழுதுக.**

**ARC பரிந்துரைகள்**

**நிர்வாக செயல்பாடுகளை மாற்றுதல்** 5

- செயலகத்தால் நிறைவேற்றப்படும் நிர்வாகப்பணிகள் பொருத்தமான நிறுவனங்களுக்கு மாற்றப்படவேண்டும்.
- இரண்டு பணியாளர் செல்களை அமைக்கவும்
- திட்டமிடல் மற்றும் கொள்கை பற்றிய ஒருங்கிணைந்த செல்
- நிதித்துறை பிரிவு

**பணியாளர்துறை**

- ஒரு புதிய பணியாளர் துறை தலைமைச் செயலாளர் பொறுப்பில் இருக்க வேண்டும் மற்றும் முதலமைச்சரின் கீழ் இருக்க வேண்டும்

**கொள்கை ஆலோசனைக்குழு**

- இது ஒவ்வொரு நிர்வாகத் துறையின் கீழும்துறைச் செயலாளரைக் கொண்டு அதன் தலைவர் அமைக்கப்பட வேண்டும்
- நீண்டகால அல்லது மூலோபாய கொள்கைகளை உருவாக்குவதில் உதவி
- அந்தக் கொள்கைகள் செயல்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றியமைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துதல்
- செயல்படுத்துவதில் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தல்
- செயலகம் மற்றும் நிர்வாகத்துறைகள் இரண்டிலும் அதிக நிறுவன மற்றும் தனிப்பட்ட திறனை வளர்த்துக் கொள்ளுதல்

**முன்னாள் அந்தஸ்து** 1

- இது இரண்டு அலுவலகங்களில் திட்டங்களை ஆய்வு செய்யவேண்டிய தேவையை நீக்குகிறது மற்றும் பதவி வழி செயலாளராக இருப்பதன் மூலம் இயக்குனரை அரசாங்கத்தின் சார்பாக கையொப்பமிட உதவுகிறது.
- இது கொள்கை உருவாக்கம் மற்றும் அதைச் செயல்படுத்துதல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள எல்லைக் கோட்டை தளர்த்தினாலும், முழுச்செயல் முறையையும் வேகமாகவும், முடிவுசார்ந்ததாகவும், பொறுப்புக்கூறக்கூடியதாகவும்மாற்றும்.

**செயலகம் மற்றும் இயக்குநரகத்தின் ஒருங்கிணைப்பு**

- கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை செயல்படுத்தும் முகமைகளுக்கு இடையே போதுமான தொடர்புகளை அனுமதிக்கிறது.
- நகல் மற்றும் தாமதங்களை நீக்குகிறது.
- செயல்திறன் தரத்தை மேம்படுத்துகிறது.

8) **ஜி.எஸ்.டி குழுவின் தொகுப்புகளை எழுதுக? தற்போது சண்டிகரில் நடைபெற்ற ஜி.எஸ்.டி. குழுவின் பிரதிபலிப்பு யாவை?**

**ஜிஎஸ்டி கவுன்சிலின் அமைப்பு** 3

- தலைவர் – மத்திய நிதி அமைச்சர்

**உறுப்பினர்கள்**

- மத்திய வருவாய் / நிதித்துறை அமைச்சர்
- ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் நிதி / வரிவிதிப்புக்கு பொறுப்பான ஒரு உறுப்பினர்
- துணைத் தலைவர் உறுப்பினர்களிடையே பரஸ்பரம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்
- முன்னாள் செயலாளர் – வருவாய்துறை செயலாளர்
- நிரந்தர அழைப்பாளர்– வாக்களிக்கும் உரிமை இல்லாத மத்திய கலால் மற்றும் சுங்கவாரியத்தின் தலைவர்.

**வாக்கு எண்ணிக்கை:** 1

- மத்திய அரசின்வாக்கு மொத்தவாக்குகளில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையை கொண்டிருக்கும்
- மாநில அரசின்வாக்குகள் அவையில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கை கொண்டிருக்க வேண்டும்.

**சமீபத்தில் சண்டிகரில் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்:** 2

- சூதாட்ட விடுதிகள், இணைய விளையாட்டு, குதிரைப்பந்தயம் மற்றும் லாட்டரி ஆகியவற்றுக்கு 28% வரிவிதிக்கும் முடிவை GST கவுன்சில் ஒத்திவைத்தது.
- ஆன்லைன் கேமிங்கிற்கு செலுத்தப்பட்ட போட்டி நுழைவுக்கட்டணம் உட்பட பரிசீலனையின் முழுமதிப்பிலும் வரிவிதிக்கப்பட வேண்டும்
- 16 மாநில அமைச்சர்கள் எழுப்பிய ஜிஎஸ்டி இழப்பீடு தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை
- 2017 முதல் 2022 வரை ஐந்தாண்டுகள் நிறைவடைந்த நிலையில், தொற்றுநோய் (2 வருடஇழப்பு) காரணமாக வருவாய் இழப்பு மற்றும் அதன் இழப்பீடு மேலும் நீட்டிக்கப்படுகிறது.

**9) விவாதி – தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியே.**

**தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதி** 3

- நீதித்துறை என்பது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உத்தரவாதம் அளிப்பதாகும்
- ஆனால் நடைமுறையில், இந்திய நீதி அமைப்பு ஒழுங்கற்றது மட்டுமல்ல, மிகவும் மெதுவாகவும் உள்ளது, இதன் விளைவாக நிறைய மக்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது.
- எந்த காரணத்திற்காகவும் நீதிதாமதமானால் அது எந்த சமுதாய மக்களுக்கும் மிகவும் தீங்கானது.
- ஒவ்வொரு உயர்நீதி மன்றத்தின் விழிப்புணர்வுக் குழுவும் மாதம் ஒரு முறையாவது கூட வேண்டும் என்றும் இந்தியத் தலைமை நீதிபதி பரிந்துரைத்துள்ளார்
- இது அனைத்து வழக்குகளின் முன்னேற்றத்தையும் கண்காணிக்க உதவும்

**நீதித்துறை தாமதத்திற்கான காரணங்கள்** 3

- அதிக எண்ணிக்கையில் நிரப்பப்படாத நீதித் துறைகாலியிடங்கள்
- நீண்ட நீதித்துறை செயல் முறை
- வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகை
- உள்கட்டமைப்பு குறைபாடுகள்(தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா உள்கட்டமைப்பு பற்றாக்குறையை விவரித்தார்)
- மேல் முறையீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது
- வழக்குகளைத் தீர்ப்பதற்கான விருப்பமும் திறனும் இல்லாமை
- வழக்கு பற்றிய புரிதலின்மை மற்றும் நம்பிக்கையின்மை

**10) நிர்வாகச் சட்டம் பற்றி வரையறு மற்றும் அதன் உட்கூறுகளை விளக்குக.**

**நிர்வாகசட்டம்** 2

- ஐவர் ஜென்னிங்ஸ் – நிர்வாக சட்டம் என்பது நிர்வாகம் தொடர்பான சட்டம். இது நிர்வாக அதிகாரிகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் கடமைகளை தீர்மானிக்கிறது.

**இது தொடர்பான சட்டங்கள்**

- நிர்வாக அமைப்புகளின் விதி உருவாக்கும் அதிகாரம்,
- நிர்வாக நிறுவனங்களின் அரை –நீதித்துறை செயல்பாடு,
- பொது அதிகாரிகளின் சட்டப் பொறுப்புகள் மற்றும்
- நிர்வாக அதிகாரிகளை மேற்பார்வையிட சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரம்.

**நிர்வாக சட்டத்தின் கூறுகள்** 4

**அதிகாரங்கள்**

- நிர்வாக அதிகாரிகளின் அமைப்பு மற்றும் அவற்றின் அதிகாரங்களைக் கையாள்கிறது
- இந்த அதிகாரிகளின் அதிகாரங்களுக்கு வரம்புகள் உள்ளன
- இந்த அதிகாரிகளால் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் இதில் அடங்கும்.
- சாதாரண நீதிமன்றங்கள் தனது அதிகாரத்தின் அடிப்படையில் நிர்வாக அதிகாரிகளை மேற்பார்வை செய்கிறது.

**கடமைகள்**

- இது அரசாங்கத்துடனான தனிநபர்களின் உறவைக் கையாள்கிறது.
- இது சட்டத்தை நடைமுறைப்படுத்த நிர்வாக மற்றும் அரைநீதித்துறை அதிகாரிகளின் அமைப்பு மற்றும் அதிகார அமைப்பை தீர்மானிக்கிறது

**உரிமைகள்**

- சட்டமன்ற செயல் முறைகளின் போதாமையை நீக்குகிறது
- உதாரணம் - RTI சட்டம் 2005, லோக்பால் & லோக் ஆயுக்தா சட்டம் 2013.

**பொறுப்புகள்**

- மக்கள் நலனுக்கான செயல்பாடு
- மக்களின் சிக்கலான பிரச்சனைகளை சமாளிக்க அதிக சட்டங்கள் தேவை
- நிர்வாக தீர்ப்பாயங்கள் உருவாக்கம்
- உதாரணம் : போட்டி மேல் முறையீட்டு தீர்ப்பாயம்

SURESH

11) அரசியலமைப்பின்படி குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் மன்னிப்பளிக்கும் அதிகாரம் ஓர் ஒப்பீடு செய்க. 6

| அம்சங்கள் | குடியரசுத் தலைவரின் மன்னிப்பு அதிகாரம் | ஆளுநரின் மன்னிப்பு அதிகாரம் |
|---|---|---|
| அரசியலமைப்பு விதிகள் | சட்டப்பிரிவு72 :எந்தவொரு குற்றத்திற்காகவும் தண்டிக்கப்பட்ட நபரின் தண்டனையை இடைநிறுத்துவதற்கும், நீக்குவதற்கும் அல்லது மாற்றுவதற்கும் மன்னிப்பு, தளர்வு, அவகாசம் அல்லது தண்டனையை நீக்குவதற்கு குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரம் | சட்டப்பிரிவு 161 : ஒரு மாநிலத்திற்கு உட்பட்ட குற்றவாளிகள் கருணை மனு கொடுக்கும் பொழுது அதனை பரிசீலித்து தண்டனையை குறைப்பு செய்ய ஆளுநருக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் |
| இராணுவ நீதிமன்றம்: | இராணுவ நீதிமன்றத்தால் தண்டனை அல்லது தண்டனை வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் மன்னிப்புவழங்க ஜனாதிபதியின் அதிகாரம் நீட்டிக்கப்படுகிறது, | பிரிவு 161 ஆளுநருக்கு அத்தகைய அதிகாரம் எதையும் வழங்கவில்லை. |
| மரண தண்டனை: | கொடுக்கப்படும் தண்டனை மரண தண்டனையாக இருக்கும் அனைத்து வழக்குகளிலும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முடியும் | ஆனால் ஆளுநரின் மன்னிப்பு அதிகாரம் மரண தண்டனை வழக்குகளுக்கு நீட்டிக்கப்படாது. |
| குற்றத்தின் தன்மை | அவரது மன்னிப்பு அதிகாரம் யூனியன் சட்டத்திற்கு எதிராக குற்றவாளி ஒரு குற்றத்தைச் செய்த வழக்குகளுக்கு வழங்கப்படுகிறது | ஆளுநரின் மன்னிப்பு அதிகாரம் மாநில சட்டத்திற்கு எதிராக குற்றவாளி ஒரு குற்றத்தைச் செய்த வழக்குகளுக்கு வழங்கப்படுகிறது |
| எடுத்துக்காட்டு | மாருராம் எதிராக யூனியன் ஆஃப் இந்தியா வழக்கில் (1980):இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு, 72 வது பிரிவின் கீழ் உள்ள அதிகாரம் மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், குடியரசுத் தலைவரின் சொந்த விருப்பத்தின் பேரில் அல்ல என்று கூறியது. | ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்குவது குறித்து முடிவெடுக்க குடியரசுத் தலைவருக்கு 'பிரத்யேக அதிகாரம்' உள்ளது என்றும் ஆளுநருக்கு அல்ல என்றும் மத்திய அரசு கூறியுள்ளது. |

12) **பிரதமர் அலுவலகத்தின் செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

**<u>பிரதமர் அலுவலகத்தின் மாற்றம்:</u>**

**<u>பிரதமர் அலுவலகம்:</u>** **1.5**

- கவர்னர் ஜெனரலின் (தனிப்பட்ட) செயலாளருக்குப் பதிலாக 1947 இல் பிரதம மந்திரி அலுவலகம் நடைமுறைக்கு வந்தது.
- ஜூன் 1977 வரை, இது பிரதம மந்திரி செயலகம் (PMS) என்று அழைக்கப்பட்டது.
- இது பிரதமருக்கு உதவுகிறது
- இந்திய அரசின் உயர் மட்டத்தில் முடிவெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது
- பிரதமருக்கு செயலக உதவி மற்றும் முக்கியமான ஆலோசனைகளை வழங்குகிறது

**<u>பிரதமர் அலுவலகத்தின் பங்கை மாற்றுதல்</u>** **4.5**

- கடந்த இருபது ஆண்டுகளில் பிரதமர் அலுவலகம் அவசியமாகி விட்டது
- நிர்வாகம் அதன் சிக்கலான தன்மையிலும் நோக்கத்திலும் அதிகரித்துள்ளது.
- சர்வதேச நிலைமை மிகவும் சிக்கலானது.
- இந்த அலுவலகம் பதவியில் இருப்பவரின் குணம், ஆளுமை மற்றும் பிரதமரின் செயல்பாடு ஆகியவற்றின் கண்ணாடியாகும்.
- உள்நாட்டில் அரசியல் கட்சி மீது பிரதமரின் செல்வாக்கு, கீழ் சபையில் முழுப் பெரும்பான்மை, ஆதிக்கம் செலுத்தும் ஆளுமைப் பண்புகள் ஆகியவற்றின் காரணமாக பிரதமர் அலுவலகம் அதிக சக்தி வா ய்ந்தது.

13) **ஆளுநரின் தன்னிச்சையாக செயல்படும் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் யாவை?**

**<u>அரசியலமைப்பு விருப்புரிமை</u>** **3.5**

- ஜனாதிபதியின் பரிசீலனைக்கு ஒரு மசோதாவை முன்பதிவு செய்தல்.
- மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துவதற்கான பரிந்துரை.
- அண்டை யூனியன் பிரதேசத்தின் நிர்வாகியாக தனது கடமைகளைச் செய்யும்போது (கூடுதல் பொறுப்பு காரணமாக).
- அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களின் கனிம ஆய்வு உரிமங்களில் இருந்து தன்னாட்சி பெற்ற பழங்குடியினர் மாவட்ட கவுன்சிலுக்கு அவசர நிலையாக செலுத்த வேண்டிய தொகையைத் தீர்மானித்தல்.

- மாநில நிர்வாக மற்றும் சட்டமன்ற விவகாரங்கள் குறித்து முதலமைச்சரிடம் தகவல் பெறுதல்.

**சூழ்நிலை விருப்புரிமை** 2.5

- மாநில சட்டப்பேரவையில் எந்தக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாத போது அல்லது தற்போதைய முதல்வர் எதிர்பாராத விதமாக மரணமடைந்து, வெளிப்படையான வாரிசு இல்லாத போது முதலமைச்சரை நியமித்தல்.
- மாநில சட்டப் பேரவையின் நம்பிக்கையை நிரூபிக்க முடியாத நிலையில் அமைச்சர்கள் குழுவை நீக்குதல்.
- அமைச்சர்கள் குழுபெரும்பான்மையை இழக்கும் போது மாநில சட்டமன்றத்தை கலைத்தல்.
- மேலும், குடியரசுத் தலைவரின் உத்தரவுகளுக்கு இணங்க நிறைவேற்றப்பட வேண்டிய குறிப்பிட்ட கடமைகள் ஆளுநர் மீது சுமத்தப்படுகின்றன.
- இதுதொடர்பாக, முதல்வர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவைக் கலந்தாலோசிக்க வேண்டியநிலையில், ஆளுநர் தனது விருப்பப்படி செயல்படுகிறார்.

**14) குடியரசுத் தலைவரின் அரசியலமைப்பு நிலை பற்றி எழுதுக.** 6

- இந்திய அரசியலமைப்பின் 53, 74, மற்றும் 75 ஆகியபிரிவுகள் குடியரசுத் தலைவரின் அரசியலமைப்பு நிலையைப்பின் வரும் முறையில் மதிப்பிடும் போது கருத்தில்கொள்ள வேண்டும்:
- உறுப்பு 53 ஒன்றியத்தின் நிர்வாக அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்குகிறது, அரசியலமைப்பின் படி அவருக்கு நேரடியாகவோ அல்லது அவருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகள் மூலமாகவோ அதிகாரத்தை செயல்படுத்தப்படுவார்..
- அரசமைப்புச் சட்டத்தின் 74வதுபிரிவு, குடியரசுத் தலைவரின் பணிகளைச் செயல்படுத்துவதற்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஒரு அமைச்சர்கள் குழு இருக்க வேண்டும் என்றும், அவர் அத்தகைய ஆலோசனையின்படி செயல்பட வேண்டும் என்றும் கூறுகிறது.
- சட்டப்பிரிவு 75(3) அமைச்சரவை மக்களவைக்கு கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறுகிறது.
- குடியரசுத் தலைவர் மக்களவைக்கு பதிலளிக்கத் தேவையில்லை.
- இந்திய அரசியலமைப்பின் 54 மற்றும் 55 வது பிரிவு இந்திய ஜனாதிபதியின் முறை மற்றும் தேர்தல் செயல் முறையை நமக்குத் தெரிவிக்கிறது.
- அரசியலமைப்பின் பிரிவு 58, குடியரசுத்தலைவர் பதவிக்கு தகுதிபெறும் நபர் குறைந்தபட்சம் 35 வயதுடையவராகவும், இந்தியக்குடிமகனாகவும், மக்களவை உறுப்பினராக இருக்கத் தகுதி பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆதாயம் தரும் பதவியை வகித்தால், ஜனாதிபதி தேர்தலில் நிற்கும் தகுதி இல்லை.
- நமது அரசியலமைப்பில் பொதிந்துள்ள பாராளுமன்ற அரசாங்க வடிவத்தின்கீழ், குடியரசுத்தலைவர் அரசியலமைப்பு அல்லது அரசின் தலைவராக உள்ளார், மேலும் அவர் தனது அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் அரசியலமைப்பின் மூலம் அல்லது அதன் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் செயல்பாடுகளையும் பயன்படுத்துகிறார். மாநிலங்களில் ஆளுநரின் அரசியல் சாசனப் பதவியும் அப்படித்தான்.

**15) நீதித்துறை சீராய்வு தொடர்பாக விளக்குக.**

**நீதித்துறை சீராய்வு** 2

- இது ஒரு வகையான நீதிமன்ற நடவடிக்கையாகும், இதில் ஒரு நீதிபதி, ஒரு பொது அமைப்பால் எடுக்கப்பட்ட முடிவு அல்லது செயலின் சட்டபூர்வமான தன்மையை மதிப்பாய்வு செய்கிறார்.
- இந்திய அரசியலமைப்பு அமெரிக்க அரசியலமைப்பின் அடிப்படையில் நீதித்துறை சீராய்வை ஏற்றுக் கொண்டது.
- இந்தியா சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுகிறது.
- அதாவது, சட்டமன்றம் அல்லது சம்பந்தப்பட்ட அமைப்பால் இயற்றப்பட்ட சட்டம், கடிதத்திற்கு சரியான நடைமுறையைப் பின்பற்றினால் மட்டுமே செல்லுபடியாகும்.
- நீதித்துறை மறுஆய்வு அதிகாரத்துடன், நீதிமன்றங்கள் அடிப்படை உரிமைகளின் பாதுகாவலராக செயல்படுகின்றன.

**முக்கியத்துவம்** 2

- அரசியலமைப்பின் மேலாதிக்கத்தைப் பேணுவதற்கு இது அவசியம்.
- இது நிர்வாகிகளின் கொடுங்கோன்மையை தடுக்கிறது.
- இது கூட்டாட்சி சமநிலையை பராமரிக்கிறது.
- சட்டமன்றம் மற்றும் நிர்வாகத்தால் அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதை சரிபார்க்க இது அவசியம்.
- நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு இது அவசியம்.
- இதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது.

**வரம்புகள்:** 2

- நீதித்துறை சீராய்வு அரசாங்கத்தின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது.
- இது உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் போன்ற உயர்நீதிமன்றங்களுக்கு மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளது.
- நீதிமன்றங்களின் தொடர்ச்சியான தலையீடுகள் அரசாங்கத்தின் நேர்மை, தரம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றில் மக்களின் நம்பிக்கையைக் குறைக்கும்.
- அரசியல் கேள்விகள் மற்றும் கொள்கை விஷயங்களில் மிகவும் அவசியமின்றி நீதித்துறை தலையிட முடியாது.
- அது நடைமுறையில் உள்ள சட்டத்தை மீறும்போது, அரசியலமைப்பால் பயன்படுத்தப்படும் அதிகார வரம்பை மீறுகிறது.

16) கேபினட் செயலாளரின் பணி மற்றும் பங்களிப்பு தொடர்பாக முதலாவது நிர்வாக சீர்திருத்த ஆணையம் அளித்த பரிந்துரைகளைப் பட்டியலிடுக.

**அமைச்சரவைசெயலாளர்:** 1

- இந்தியாவில் 1950 ஆம் ஆண்டு அமைச்சரவை செயலாளர் அலுவலகம் உருவாக்கப்பட்டது
- அமைச்சரவை செயலாளர் அமைச்சரவை செயலகத்தின் தலைவர்
- அவர் இந்தியாவின் மூத்த அரசு ஊழியர்

**1வது ARC பரிந்துரைகள்:** 5

- அவர் மத்திய நிர்வாகத்தின் பொது ஒருங்கிணைப்பாளராக செயல்பட வேண்டும்
- அவர் பிரதமரின் முதன்மை பணியாளர் ஆலோசகராகவும் செயல்பட வேண்டும்
- கொள்கை விஷயங்களில் அவர் அளிக்கும் அறிவுரைகள் அவரவர் மட்டத்திலேயே வழங்கப்பட வேண்டும்
- அவர், திறம்படசெயல்பட, மூன்று முதல் நான்கு ஆண்டுகள் பதவிக்காலம் இருக்க வேண்டும்.
- கேபினட் செயலாளரின் பங்கு ஒருங்கிணைப்பாளரின் பங்குடன் மட்டும் இருக்காமல், பிரதமர், அமைச்சரவை மற்றும் கொள்கை விஷயங்களில் அமைச்சரவைக் குழுவின் முதன்மை பணியாளர் ஆலோசகராக இருக்க வேண்டும்.
- அரசாங்க ஊழியர்களிடையே தனிப்பட்ட அமைச்சர்களுக்கு ஆரோக்கிய மற்ற தனிப்பட்ட உறவுகள் வளர்வதைத் தடுப்பதில் பிரதமர், கேபினட் செயலாளர் மற்றும் மத்திய தனிப்பட்ட நிறுவனத்துடன் சிறப்பு அக்கறை எடுக்க வேண்டும்.

17) கேபினட்டின் பல்வேறு பங்குகள் பற்றி விளக்குக.

**அமைச்சரவை:** 6

- பாராளுமன்ற அரசாங்கத்தில் அமைச்சரவையானது பாராளுமன்றத்தின் குழு என வர்ணிக்கப்படுகிறது
- அமைச்சரவை நிர்வாக மற்றும் சட்டமன்றக் கிளைகளை ஒன்றிணைக்கிறது

**அமைச்சரவையின் பங்கு**

**முடிவெடுக்கும் அதிகாரம்**

- அரசியல் மற்றும் நிர்வாக அமைப்பு இரண்டிலும்

**கொள்கை உருவாக்கம்**

- முன்னுரிமைகளைத் தீர்மானிக்க பாராளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத் தொடரின் தொடக்கத்திலும் சட்டமன்றத் திட்டத்தைத் திட்டமிடுகிறது.
- கேபினட் அமைச்சர்கள் அனைத்து முக்கியமான விஷயங்களிலும் கொள்கைகளை உருவாக்குகிறார்கள், முடிவுகளை எடுக்கிறார்கள் மற்றும் வரைவு மசோதாக்களை உருவாக்குகிறார்கள்

**உச்ச நிர்வாக அதிகாரம்**

- இது யூனியன் முழுவதும் அரசு ஊழியர்கள் செய்யும் வேலையை மேற்பார்வையிடுகிறது மற்றும் வழி நடத்துகிறது.

**தலைமை ஒருங்கிணைப்பாளர்**

- அரசாங்கத்தின் பல அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து வழிகாட்டுகிறது.

**தலைமை நெருக்கடி மேலாளர்**

- அவர் அனைத்து அவசரகால சூழ்நிலைகளுக்கும் பொறுப்பானவர்

**நிதி மீதான கட்டுப்பாடு**

- அரசின் மொத்த செலவினங்களுக்கும், அதைச் சந்திக்கத் தேவையான வருவாயை உயர்த்துவதற்கும் அமைச்சரவை பொறுப்பாகும். அமைச்சரவை பட்ஜெட் குறித்து விவாதிப்பதில்லை.
- இறுதி முடிவு நிதி அமைச்சருடையது.

18) மாநில முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் இடையே உள்ள அரசியலமைப்பு நிதிகளை விவாதி

**ஆளுநர்** 0.5

- ஆளுநர் மாநிலத்தின் தலைமை நிர்வாகத் தலைவர். ஒரு மாநிலத்தின் ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார். அவரது வழக்கமான பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்
- ஆளுநர் மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவராகக் கருதப்படுகிறார்

**முதல் அமைச்சர்:** 1

- முதல்வர் உண்மையான நிர்வாகி, அவர் பெரும்பான்மை கட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர்மக்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.
- கவர்னர் பெயரளவு தலைவராக செயல்படுகிறார், அதே சமயம் உண்மையான அதிகாரம் மாநில முதலமைச்சரிடம் உள்ளது.

**முதல்வர் மற்றும் கவர்னர் இடையே அரசியலமைப்பு ஒற்றுமை:** 4.5

**விதி - 163**

- முதல்வர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவால் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.
- ஆனால் ஆளுநர் தனது சொந்த விருப்பப்படி செயல்படும்போது, அமைச்சர்கள் குழுவின் எந்த ஆலோசனையும் தேவையில்லை

**விதி 164**

- ஆளுநர் முதலமைச்சரை நியமிப்பார், பின்னர் முதல்வர் அமைச்சர்கள் நியமனம் குறித்து ஆளுநருக்கு பரிந்துரை செய்கிறார்

**விதி - 167**

- முதல்வர் மற்றும் அமைச்சர்கள் குழு எடுக்கும் அனைத்து நிர்வாக முடிவுகளையும் ஆளுநரிடம் தெரிவிக்க வேண்டும்.
- இது முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் இடையிலான அரசியலமைப்பு உறவுகளை விவரிக்கிறது.

அலகு - 2

**1) மத்திய நிர்வாகத்தில் பிரதமர் அலுவலகத்தின் முக்கியப் பங்கு என்ன?**

**பிரதமர் அலுவலகம்** 2

**அறிமுகம்**

- பிரதமர் அலுவலகம் ஒரு பணியாளர் நிறுவனம் மற்றும் அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்ட அமைப்பு.
- பிரதமருக்கு செயலக உதவியாளர் மற்றும் முக்கியமான ஆலோசனைகளை வழங்குதல்
- பிரதம மந்திரி அலுவலகம் வணிக விதிகள் 1961இன் ஒதுக்கீட்டின்கீழ் இந்திய அரசாங்கத்தின் ஒரு துறையின் அந்தஸ்தைப் பெறுகிறது.
- இது இணைக்கப்பட்ட மற்றும் துணை அலுவலகம் இல்லை.

**பிரதமர் அலுவலகத்தின் பரிணாமம்** 2

- பிரதமர்செயலகம் 1947 இல் உருவாக்கப்பட்டது.
- இது 1977 வரை பிரதமர் செயலகம் என்று அழைக்கப்பட்டது மற்றும் மொராஜி தேசாய் அமைச்சகத்தின் போது பிரதமர் அலுவலகம் என மறுபெயரிடப்பட்டது.

**இந்தியாவில் பிரதமர் அலுவலகத்தின் தேவை:**

- அரசாங்கத்தின் சிக்கலான தன்மையையும் நோக்கத்தையும் அதிகரிக்கவும், அவற்றைக் கையாளவும் தொழில்நுட்ப ரீதியாக திறமையான பணியாளர் நிறுவனம் தேவை.
- அமைச்சர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு பிரச்சனைகளைத் தீர்ப்பது.
- PMO என்பது பிரதமரின் அலுவலக அமைப்பாக செயல்படுகிறது.

**பிரதமர் அலுவலகத்தின் அமைப்பு** 2

- அரசியல்தலைவர் - பிரதமர்
- நிர்வாகத்தலைவர் - முதன்மைச்செயலாளர்
- செயலாளர்கள்
- ஒன்று / இரண்டு கூடுதல் செயலாளர்கள்
- 5 இணைச் செயலாளர்கள்
- தேசிய பாதுகாப்பு ஆலோசகர்
- பல இயக்குநர்கள்/ துணைச் செயலாளர்கள்

**பிரதமர் அலுவலகத்தின் முக்கிய பங்கு:** 6

- ஒரு வழித்தடமாக செயல்படுகிறது:
- மையத்தின் அமைச்சகங்கள் துறை மற்றும் மாநில அரசுடன் தொடர்பைப் பேணுதல்.
- ஜனாதிபதி, ஆளுநர் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் இணக்கமான உறவைப் பேணுதல்.
- பத்திரிக்கை மற்றும் பொது மக்களுடனான உள்ளடக்கத்தைப் போலவே பிரதமரின் மக்கள் தொடர்புகளையும் கவனித்துக் கொள்வது

**பிரதமரின் சிந்தனை-தொட்டி**

- இது எந்த துறை/ அமைச்சகங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேண்டிய தகவல்களையும் கையாள்கிறது.
- அரசாங்கத் தலைவராக பிரதமரின் ஒட்டுமொத்தப் பொறுப்புகளில் அவருக்கு உதவுகிறார்
- முக்கியமான பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள்.
- மாநிலங்களுக்கு பிரதமரால் அறிவிக்கப்பட்ட சிறப்புப் சலுகைகள் PMO ஆல் கண்காணிக்கப்பட்டு, பிரதமருக்குச் காலஅறிக்கைகள் சமர்பிக்க உதவுகின்றன

**பிரதமரின் பொறுப்புகளை நிறைவேற்ற உதவுகிறது**

- நிதி ஆயோக் மற்றும் தேசிய வளர்ச்சிக் குழுவின் தலைவராக பிரதமரின் பொறுப்புகளில் உதவுங்கள்.
- பிரதம மந்திரி தொடர்பான வணிக விதியின்கீழ் அனைத்து குறிப்புகளையும் கையாள்கிறது

**நிதி மேலாண்மை**

- பிரதமரின் தேசிய நிவாரண நிதியும் (PMNRF) மற்றும் தேசிய பாதுகாப்பு நிதியும் (NDF) நேரடியாக ஊனிநு இலிருந்து இயக்கப்படுகின்றன.
- இந்தியப் பிரிவினையின் காரணமாக பாகிஸ்தானில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக பொதுப்பங்களிப்புடன் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவால் 1948 ஜனவரியில் பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதி அறக்கட்டளையாக நிறுவப்பட்டது.

**PMO குறைதீர்ப்பு தளம்**

- CPGRAMS (மையப்படுத்தப்பட்ட பொதுக்குறைகள் நிவர்த்தி மற்றும் கண்காணிப்பு அமைப்பு) என்பது குடிமக்கள் பொது அதிகாரிகளிடம் குறைகளைத் தெரிவிக்கும் ஒரே போர்டல் ஆகும்.
- இது 24 × 7 கிடைக்கக்கூடிய ஆன்லைன் தளம் மற்றும் மத்திய மற்றும் மாநிலங்களின் அமைச்சகங்கள்/ துறைகள் அனைத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

- இவ்வாறு PMO அந்தஸ்து மற்றும் செல்வாக்கின் அளவு பிரதமரின் தனிப்பட்ட இயல்பு மற்றும் அரசியல்-நிர்வாக சூழ்நிலையின் பதிலளிக்கும் தன்மை ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும்.

**2) தலைமைச் செயலாளரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் விளக்குக.**

**தலைமைச் செயலாளர்** 0.5

**அறிமுகம்**

- தலைமைச் செயலாளர் மாநிலச் செயலகத்தின் நிர்வாகத் தலைவர்.
- அவர் மாநில நிர்வாகத்தின்படி உச்ச நிலையை வகிக்கிறார்.
- அவர் நிர்வாகத்தின் லிஞ்ச்பின் (அமைப்பின் முக்கியமான பகுதி).
- அவர் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகாரபூர்வ தலைவராகச் செயல்படுகிறார்.

**தலைமைச் செயலாளர் நியமனம்** 1

- தலைமைச் செயலாளர் முதலமைச்சரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

SURESH

- இது முதல்வர் எடுத்த நிர்வாக நடவடிக்கை என்பதால், மாநில ஆளுநர் பெயரில் நியமனம் செய்யப்படுகிறது
- 2021 முதல் தற்போதைய தமிழக தலைமைச் செயலாளர்-வி.இறைஅன்பு ஐ.ஏ.எஸ்.

**பதவிக்காலம்** 1

- தலைமைச் செயலாளர் பதவிக்காலம் அமைப்பில் இருந்து விலக்கப்பட்டுள்ளது
- நிலையான பதவிக்காலம் இல்லை.

**தலைமைச் செயலாளர் பதவி** 1

- தலைமைச் செயலர் பதவி என்பது இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சிவில் சேவைகளில் மிக உயர்ந்த பதவியாகும்.
- அமைச்சரவையின் அனைத்து விஷயங்களிலும் தலைமைச் செயலாளரே முதலமைச்சரின் தலைமை ஆலோசகர்.

**செயல்பாடுகள்** 8

**முதல்வரின் ஆலோசகர்**

- மாநில ஆட்சி தொடர்பான அனைத்து கொள்கைகள் குறித்தும் தலைமைச் செயலாளரிடம் முதல்வர் ஆலோசனை

**அமைச்சரவையின் செயலாளர்**

- அவர் அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கிறார் மற்றும் அதன் தொடர்ச்சியின் கயிறுகளை வைத்திருக்கிறார்.
- அவர் அத்தகைய கூட்டங்களை எடுத்தபிரிவை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்.

**சிவில் சர்வீஸ் தலைவர்**

- மூத்த மாநில அரசு ஊழியர்களின் நியமனங்கள், போக்குவரத்து மற்றும் பதவி உயர்வு தொடர்பான அனைத்து வழக்குகளையும் அவர்கையாள்கிறார்.

**தலைமை ஒருங்கிணைப்பாளர்**

- மாநிலநிர்வாகத்தின் ஒருங்கிணைப்பு
- துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு
- துறை செயலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டின் கூட்டத்திற்கு அவர் தலைமை தாங்குகிறார்.

**பல்வேறு துறை தலைவர்**

- சில செயலகத் துறையின் நிர்வாகத் தலைவர்.
- பொது நிர்வாகத்துறை, தனிநபர் துறை, திட்டமிடல் துறை மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை ஆகியவை நேரடியாக தலைமைச் செயலரின் பொறுப்பில் உள்ளன.

**தலைமை நிர்வாகி**

- வெள்ளம், வறட்சி, வகுப்புவாத குழப்பங்கள் மற்றும் பிற தீவிர சூழ்நிலைகள் மிக முக்கியபங்கு வகிக்கின்றன.

**பிற செயல்பாடுகள்**

- சட்டம் ஒழுங்கு மற்றும் திட்டமிடல் நிர்வாகம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறார்.
- அவர் மத்திய அரசு மற்றும் பிற மாநில அரசுகளுக்கு இடையேயான தகவல் தொடர்புக்கான பாலமாக செயல்படுகிறார்.

**முடிவுரை** 0.5

- அவர் மாநில அரசின் செய்தித் தொடர்பாளர் மற்றும் தேசிய வளர்ச்சி கவுன்சில் (NDC) கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.
- உள்துறைச் செயலர், நிதிச் செயலர் மற்றும் மத்திய அளவில் செயலர் ஆகியோருக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்படும் கேபினட் செயலாளருடன் ஒப்பிடும் போது, மாநில நிர்வாகத்தில் தலைமைச் செயலர் ஆற்றிய செயல்பாடுகள் மற்றும் அவர் வகிக்கும் பாத்திரங்கள் மிகப் பெரியவை, மாறுபட்டவை, பரந்தவை.

**3) குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை, பதவிக்காலம் மற்றும் பதவிநீக்கம் பற்றி விளக்குக.**

**குடியரசுத்தலைவர்**

**அறிமுகம்** 1.5

- இந்தியக் குடியரசுத் தலைவர் (பிரிவு 52) இந்தியாவின் முதல் குடிமகன், அவர் அரசியலமைப்புத் தலைவர்
- அவர் பெயரளவிலான நிர்வாக அதிகாரி (பிரிவு 53)
- அவருக்கு சட்டமன்ற, நிர்வாக, நிதிஅதிகாரம், நீதித்துறை அதிகாரம் மற்றும் இராணுவ அதிகாரங்கள் உள்ளன.

**அரசியலமைப்பு விதிகள்** 2

- பிரிவு 54 - ஜனாதிபதி தேர்தல்
- பிரிவு 55 - ஜனாதிபதியின் தேர்தல் முறை
- பிரிவு 56 - ஜனாதிபதியின் பதவிக்காலம்
- பிரிவு 57 - மறுதேர்தலுக்கான தகுதி
- பிரிவு 58 - ஜனாதிபதியின் தகுதிகள்

**ஜனாதிபதி தேர்தல்** 2

- மறைமுகதேர்தல் முறை
- ரகசிய வாக்கெடுப்பு மூலம் வாக்களிப்பது
- அறுதிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற வேண்டும்.
- பிரிவு 71 தேர்தல் தொடர்பான சர்ச்சைகள் உச்ச நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு பிரிக்கப்பட்டு அதன் முடிவே இறுதியானது.

**தேர்தல் கல்லூரி** 2

- நாடாளுமன்றத்தின் மேல் மற்றும் கீழ்சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் (லோக்சபா மற்றும் ராஜ்யசபா எம்.பி.க்கள்)
- சட்டமன்ற உறுப்பினர்கள் (எம்எல்ஏக்கள்)
- விதி 55 நியமன உறுப்பினர்கள் ஜனாதிபதி தேர்தலில் பங்கேற்கமாட்டார்கள்

**பதவிக்காலம்**

- 5 வருடம்
- அவர் துணை ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி ராஜினாமா செய்யலாம்.
- குற்றச்சாட்டுகளில் இருந்து நீக்கப்படலாம் (விதி 61)
- அலுவலகத்திற்கு மறு தேர்தலுக்கு தகுதியானவர் (விதி 57)

**குற்றஞ்சாட்டுதல்** 4

- விதி 61ன் படி அரசியலமைப்பு மீறல்

- குடியரசுத் தலைவர் தன்னுடைய பணித்துறப்பு கடிதத்தினை துணைக் குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம்
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்
- அவைக்கு வருகைபுரிந்த அவர்களில் நான்கில் ஒரு பங்கிற்கு குறையாமல் ஆதரவு தெரிவிக்க வேண்டும்
- குடியரசுத்தலைவர் தனது பதவிக்காலம் முடிந்தாலும் அவருக்குப்பின் ஒருவர் பதவி ஏற்கும் வரை பதவியில் தொடரலாம்

**யார் பங்கேற்கலாம்**

- லோக்சபா தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமன உறுப்பினர்
- ராஜ்யசபா தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமன உறுப்பினர்

**யார் பங்கேற்க முடியாது**

- நியமன உறுப்பினர்கள்
- டெல்லி மற்றும் புதுச்சேரி மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தவிர.

**முடிவுரை** 0.5

- 5 ஆண்டுகள் பதவியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எம்எல்ஏக்கள் அடங்கிய தேர்தல் குழு மூலம் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்தியாவில் இதுவரை எந்த ஜனாதிபதியும் பதவி நீக்கம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**4) இந்திய குடியரசுத் தலைவரின் பதவி என்பது அரசு முத்திரை மட்டும் அல்ல - இந்தியா குடியரசானதிலிருந்து மேற்கண்ட கூற்றுக்கு காரணமான குடியரசுத் தலைவரின் செயல்பாடுகளை விவரி.**

**அறிமுகம்** 2

- இந்திய ஜனாதிபதி அமெரிக்க ஜனாதிபதியிலிருந்து வேறுபட்டவர்.
- இந்திய அரசியலமைப்பில் அவருக்கு அதிக அதிகாரம் உள்ளது.
- ஆனால் அவர் மந்திரி சபையின் உதவி மற்றும் ஆலோசனையின்படி செயல்பட வேண்டும். (விதி 74)
- ஆனால் நாட்டின் நிலைமைக்கு ஏற்ப செயல்படும் விருப்புரிமை அவருக்கு உண்டு.
- நிலையான அரசாங்கத்திற்கு அரசியலமைப்பின் உதவியுடன் அவர் சுதந்திரமாக செயல்பட வேண்டும்.

**அரசு முத்திரையா இல்லையா** 2

- இந்திய ஜனாதிபதி என்பது அரசு முத்திரை பதவி அல்ல, என்பது இந்திய ஜனாதிபதியின் சில நடவடிக்கைகளில் தெளிவாகத் தெரியும்.
- முக்கிய அரசியல் கட்சியின் முடிவுக்கு எதிரான கடைசி விருப்பம் அவர்தான்.
- இந்தியக் குடியரசுத் தலைவர் மீது எதிர்க்கட்சியினர் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர்.
- மக்கள் மற்றும் நாட்டின் நலனுக்கு எதிரான முக்கிய அரசியல் கட்சி முடிவெடுத்தால்.

**அதிகாரங்கள்** 2

- இந்தியாவில் அவசர நிலை, சூழ்நிலை நெருக்கடி ஏற்படும்போது, அவர் முக்கிய முடிவை எடுக்கிறார்.
- அவர் நிர்வாகத்தின் விளக்கத்தைக் கேட்க பிரதமர் மற்றும் அமைச்சர்கள் குழுவை அழைக்கலாம்.
- ஜனாதிபதி கையொப்பமிட்ட பிறகே மசோதாக்கள் செயல்படும்.
- குடியரசுத் தலைவர் சுதந்திரமாக அவரின் அதிகாரத்தை அதிகரிக்கிறார்.

**ராஜேந்திரபிரசாத்**

- இந்தியாவின் முதல் ஜனாதிபதி
- இரண்டு முறை இந்திய ஜனாதிபதியாக இருந்தார்.
- ஜவஹர்லால் நேருவுடன் அவருக்கு நல்ல உறவு இல்லை
- பிரதான அரசியல் கட்சி அரசாங்கத்தை அமைத்தால், ஜனாதிபதியின் அதிகாரத்தில் அவர்களும் தலையிட முடியாது என்று அவர் அறிவித்தார்.

**ஜெய்சிங்** 6

- 1984 இந்திரா காந்தியின் மறைவுக்குப் பிறகு, திடீரென இன்னொரு பிரதமரை உருவாக்கினார்.
- அவசரச் சூழ்நிலையில் முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதை இது உணர்த்துகிறது.
- 1987 இல், அவர் பொது மக்களுக்கு எதிரான மசோதாவை திரும்பப் பெற்றார்.

**சங்கர் தயாள் சர்மா**

- 1996 இல் இரண்டு நிர்வாக முடிவுகள் அமைச்சர் சபைக்கு மீண்டும் அனுப்பப்பட்டன.

**கே.ஆர்.நாராயண்**

- அரசாங்கத்தின் உதவி மற்றும் ஆலோசனை இல்லாமல், அவர் பல முடிவுகளை வெளியிடுகிறார்.
- உத்தரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சியின் முடிவை அவர் திரும்பப் பெறுகிறார். இந்த முடிவை அமைச்சர்கள் குழு எடுத்துள்ளது
- அவர் பல வெளிநாட்டு தலைவர்களை சந்தித்தார்.

**பிரணாப் முகர்ஜி**

- சட்டங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் நிறைய கட்டளைகளை உருவாக்கவில்லை.
- இது நாடாளுமன்றத்தின் ஜனநாயக நிலையை நீர்த்துப் போகச் செய்யும்.

**முடிவுரை**

- உச்சநீதிமன்றத்திலும் பல தீர்ப்புகளில் குடியரசுத் தலைவரும், ஆளுநரும் அரசு முத்திரையாக செயல்படக்கூடாது என்று கூறியுள்ளது.
- மாறாக அவர் மக்கள் நலனுக்காக அரசியலமைப்புச் சட்டத்தின்படி செயல்பட வேண்டும்.

5) **நிதி ஆணையத்தைப் பற்றி விரிவான விளக்கம் தருக.**

**நிதி ஆணையம்** 1

- இது யூனியன் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே சில வருவாய் சேவைகளை ஒதுக்கீடு செய்யும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு அமைப்பு.
- இது இந்திய அரசியலமைப்பின் 280 வது பிரிவின் கீழ் நிறுவப்பட்டது.
- நிதிஆணையம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறது.

**வரலாற்று பின்னணி** 1

- இந்திய நிதி ஆணையத்தின் அடிப்படை வரைவு 1920 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்டது.
- முதல் நிதி ஆணையம் 1952 இல் கே.சி. நியோகி தலைமையில் 1952 இல் உருவாக்கப்பட்டது.

**ஆணையத்தின் கடமைகள்** 1

- நிதி ஆணையம் குடியரசுத் தலைவருக்குப் பின்வரும் பரிந்துரைகளை வழங்குகிறது
- வரிகளின் நிகர வருமானத்தில் யூனியன் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான விநியோகம்
- இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து மாநிலங்களின் வருவாய்க்கு உதவும் மானியங்களை நிர்வகிக்க வேண்டிய கொள்கைகள்
- நிதி ஆயோக் மற்றும் அதன் விளக்கக் குறிப்பேடு வழங்கிய பரிந்துரைகளை குடியரசுத்தலைவர் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பும் வைக்கிறார்

**மாநில நிதி ஆணையம்** 1

- இந்திய மாநிலங்களுக்கான மாநில நிதி ஆணையம் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளைக் கவனிப்பதற்காக அரசியலமைப்பு 73வது திருத்தச் சட்டம் 1992ன்கீழ் உருவாக்கப்பட்டது.

**அமைப்பு** 1

- பொது விவகாரங்களில் அனுபவம் கொண்ட தலைவர்
- மற்ற நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கத் தகுதி பெற்றவர்கள்.
2. அரசாங்கத்தின் நிதி மற்றும் கணக்குகளில் சிறப்பு அறிவு.
3. நிதி விவகாரங்களிலும் நிர்வாகத்திலும் பரந்த அனுபவம் பெற்றவர்.

**தகுதி நீக்கம்** 5

- அமைதியற்ற மனம்
- ஒரு கொடூரமான செயலைச் செய்தார்
- கருத்து வேறுபாடு

**நிதி ஆணையத்தின் செயல்பாடுகள்**

- மத்திய மற்றும் மாநிலங்களால் வசூலிக்கக்கூடிய வரிகளை பகிர்ந்து கொள்வதற்கான அடிப்படையையும், ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் மாநிலங்களுக்கு வழங்கப்படும் மானியங்களை நிர்வகிக்கும் கொள்கைகளையும் ஆணையம் தீர்மானிக்கிறது.
- மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலத்தின் பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் வளங்களை உயர்த்துவதற்கு ஒரு மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியை நீட்டிக்க தேவையான நடவடிக்கைகள்.
- நிதி ஆயோக் பரிந்துரை, மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்துகளின் மேம்பாட்டிற்காக மாநிலங்களின் ஒருங்கிணைந்த நிதியை திரட்ட உரிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கிறது.

**முடிவுரை** 1

- 2021-22 முதல் 2025-26 வரை NK சிங் தலைமையில் 15வது நிதி ஆணையம் நவம்பர் 2017 இல் இந்தியக் குடியரசுத் தலைவரால் உருவாக்கப்பட்டது.
- 15வது நிதிக்கமிஷன் மாநிலங்களுக்கு 41% வரிகளை உருவாக்கியது, நிதி பரவலாக்கத்தை நோக்கிய சாதகமான நடவடிக்கையாகும்.

6) **தலைமைச் செயலாளர் மற்றும் அமைச்சக செயலாளருக்கும் இடையே உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை எழுதுக.**

**தலைமைச் செயலாளர் Vs கேபினட் செயலாளர்**

**தலைமைச் செயலாளர்** 1

- தலைமைச் செயலாளர் மாநில செயலகத்தின் செயல் தலைவர்.

**அமைச்சரவை செயலாளர்**

- கேபினட் செயலாளர் மத்திய அரசு செயலகத்தின் நிர்வாகத் தலைவர்.

**தலைமைச் செயலாளர் Vs கேபினட் செயலாளர்** 6

- மாநிலத்தில் தலைமைச் செயலகத்துக்கு இணையான எந்த அலுவலகமும் யூனியன் / அரசாங்கத்தில் இல்லை.
- ஓரளவிற்கு, மத்திய அளவிலான அமைச்சரவை செயலாளரை தலைமைச் செயலாளரின் இணை என்று அழைக்கலாம்.

SURESH'

| அமைச்சரவை செயலாளர் | தலைமை செயலாளர் |
|---|---|
| அமைச்சரவை செயலாளர் அமைச்சரவை செயலகத்தின் நிர்வாகத் தலைவர் அல்ல | தலைமைச் செயலாளர் மாநிலச் செயலகத்தின் நிர்வாகத் தலைவர் |
| சக்தி மற்றும் செயல்பாடு குறைவாக உள்ளது | உயர் அதிகாரம் மற்றும் செயல்பாடு |
| அவர் மத்திய மட்டத்தில் சட்டப்பூர்வமாக இருப்பவர் அல்ல | மாநில அளவில் சட்டப்பூர்வமாக இருப்பவர் தலைமைச் செயலாளர் |
| பிரதமருக்கு சட்டப்பூர்வமாக இருப்பவர் முதன்மை செயலாளர் மற்றும் அமைச்சரவை செயலாளர் அல்ல | மாநிலஅளவில், தலைமைச் செயலாளர் முதல்வரின் சட்டப்பூர்வ அதிகாரி |
| கேபினட் செயலர் என்பது மத்திய செயலர்களின் தலைமை அல்ல மாறாக "பிரைமஸ் இன்டர்பரேஸ்" மட்டுமே | தலைமைச் செயலாளர் மாநிலச் செயலகத்தின் தலைவர் |
| மத்திய செயலகத்தின் எந்தத் துறையும் கேபினட் செயலாளரின் நேரடிப் பொறுப்பில் இல்லை | சிலதுறைகள் மாநிலச் செயலகம் நேரடியாக பொறுப்பு தலைமைச் செயலாளரின் கீழ் உள்ளது |

**ஒற்றுமைகள்** 5

- இருவரும் அந்தந்த தலைமை நிர்வாகிகளுக்கு தலைமை ஆலோசகர்கள்.
- அந்தந்த நிர்வாகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர்கள்.
- அந்தந்த அமைச்சரவையின் செயலாளர்கள்.
- அந்தந்த அமைச்சரவை செயலகத்தின் நிர்வாகத் தலைவர்கள்.
- இரண்டு அலுவலகங்களும் மத்திய அளவில் உருவானது
- இருவரும் அந்தந்த சிவில் சேவைகளின் தலைவர்கள்

**7) குடியரசுத் தலைவரின் தன்விருப்ப அதிகாரம் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றி விளக்குக.**

**விருப்புரிமை அதிகாரம்** 1

- பிரிவு 74, நாட்டைப் பற்றிய அனைத்து முக்கிய முடிவுகளும் இந்திய ஜனாதிபதியின் பெயரில் எடுக்கப்படுகின்றன, இருப்பினும் இவற்றில் பெரும்பாலானவை அமைச்சர்கள் குழு (CoM) வழங்கும் கட்டாய ஆலோசனையின் அடிப்படையில் இருக்கும்.
- ஆனால் குடியரசுத் தலைவரின் விருப்புரிமை வழக்கு என்றால், அமைச்சர்கள் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படாது.
- இந்திய ஜனாதிபதியின் விருப்ப அதிகாரம் இந்திய அரசியலமைப்பில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை.

**விருப்பமான அதிகாரங்களின் வழக்குகள்** 7

**முழுமையான வீட்டோ**

- ஜனாதிபதி மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருக்க முடியும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மசோதா நிராகரிக்கப்பட்டு, அது சட்டமாக மாற முடியாது.
- உதாரணமாக குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாத், 1954 இல் PEPSU ஒதுக்கீட்டு மசோதாவுக்கான ஒப்புதலைத் தடுத்து நிறுத்தினார், காரணம், ஜனாதிபதி ஆட்சியின்போது இந்த மசோதா பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது, ஆனால் ஜனாதிபதியின் ஒப்புதலின்போது அது ரத்து செய்யப்பட்டது.
- ஜனாதிபதி ஆர்.வெங்கடராமன், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம், படிகள் மற்றும் ஓய்வூதியம் (திருத்தம்) மசோதாவையும் நிறுத்தி வைத்தார்.

**சஸ்பென்சிவ் வீட்டோ**

- அவர் பாராளுமன்றத்தின் மறுபரிசீலனைக்காக ஒரு மசோதாவை (பணமசோதா அல்ல) திருப்பி அனுப்புகிறார்.
- மீண்டும் (அல்லது) திருத்தம் இல்லாமல் நிறைவேற்றப்பட்ட மசோதா, மசோதாவுக்கு தனது ஒப்புதலை அளிக்க ஜனாதிபதி கடமைப்பட்டிருக்கிறார்.
- உதாரணம் குடியரசுத்தலைவர் ஆர்.வெங்கடராமன், 1989, இந்திய அஞ்சல் அலுவலக (திருத்த) மசோதாவை மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்பினார், இருப்பினும், அப்போதைய தேசிய முன்னணி அரசாங்கம் மசோதாவைக் கைவிட்டது.

**பாக்கெட் வீட்டோ**

- ஜனாதிபதி மசோதாவை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ அல்லது திருப்பி அனுப்பவோ இல்லாமல், மசோதாவை காலவரையற்ற காலத்திற்கு நிலுவையில் வைத்திருக்கலாம்.
- அரசியலமைப்பில் காலக்கெடு எதுவும் குறிப்பிடப்படவில்லை.
